பக்கங்கள்:-22

காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2054 | கார்த்திகை 13 | வியாழக்கிழமை | 30.11.2023 | அதிர்வு 121

## சர்ச்சைக்குரிய போதகர் நேற்று நாடு திரும்பினார்



போதகர்ஜெரோம்பெர் னாண்டோ பல மாதங்க ளுக்குப் பின்னர் நாடு திரும்பினார்.

அவர், கட்டார் ஏர்லன் ஸில் சிங்கப்பூரில் 07



# இலங்கை - இந்திய ஒப்பந்தம் முழு அமுலாக்கம் மிக அவசியம்

## பாரதத்தின் பாதுகாப்புக்கும் அது கட்டாயம் புதுடில்லியில் விக்னேஸ்வரன் வலியுறுத்து

புதுடில்லி, நவம்பர் 30

“அரசமைப்பின் 13 ஆவது திருத்தம், மாகாண சபை முறைமைகள் உட்பட இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் முழு விடயங்களும் முழுமையாக நடை முறைப்படுத்தப்பட வேண்டும். தமிழர்களின் நலனுக்கு மட்டுமல்லாமல், இந்தியாவின் பாதுகாப்புக்கும் அது மிக முக்கியமாகும்.” 04

## சித்திரவதைக் கூடமாகச் செயற்படும் வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையம்

### நேரில் சென்று பார்வையிட்ட சுகாஷ் அறிக்கை



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் – வட்டுக் கோட்டைப் பொலிஸ் நிலை யம் சட்ட அடிப்படையிலான நிலையமாக அன்றி ஒரு சித்திரவதைக் கூடமாகவே செயற்பட்டு வருகின்றது என் பதை நேரில் அவதானித் தேன் என்று சட்டத்தரணி கனகரத்தினம் சுகாஷ் தெரி வித்துள்ளார். 04

## முதலை கடித்து இளம் குடும்பஸ்தர் பரிதாப உயிரிழப்பு



(அப்துல்சலாம் யாசீம்)

திருகோணமலை – சம்பூர் பொலிஸ் பிரிவுக் குட்பட்ட பகுதியிலுள்ள தொடுவான் குளத்தில் குளிப்பதற்குச் சென்ற இளம் 06

## பளையில் கோர விபத்து இளைஞர் ஒருவர் மரணம்

### இருவர் படுகாயம்

(ஆர்.எஸ்.ரஞ்சன்)

கிளிநொச்சி, பளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புலோப் பளைப் பகுதியில் இரண்டு மோட்டார் சைக் கிள்கள் நேருக்கு நேர் மோதியதில் இளைஞர் ஒருவர் உயி ரிழந்துள்ளமையுடன் மேலும் இருவர் படுகாய மடைந்துள்ளனர்.

இந்த விபத்து நேற்றுப் பிற்பகல் 06






இலங்கைத் தமிழர சுக் கட்சியின் அடுத்த தலைவர் யார் என்ற விவ காரம் ஒரு தீர்க்கமான கட்டத்தை அடைந்து விட்டது என்றே தோன் றுகின்றது.

நிலைமை தனது கையை மீறி விட்டது, தலைமைப் பதவியை விட்டு ஒதுங்குவதே தமக்குள்ள ஒரே வழி என்ற யதார்த்தத்தைத் தற்போதைய தலைவர் மாவை சேனாதிரா ஜாவும் புரிந்து கொண்டு விட்டார் போலும்.

புதிய தலைவர் தேர்வுக்கான 07

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம் - Bonding Tamils Globally

# 10 ஆயிரம் வீட்டுத் திட்டம் தொடர்பில் இரண்டு ஒப்பந்தங்கள் கைச்சாத்து!

இந்தியாவால் இலங்கையில் முன்னெடுக்கப்படும் வீடமைப்புத் திட்டங்கள் தொடர்பில் இரண்டு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டுள்ளன.

பெருந்தோட்டப் பகுதிகளில் 10 ஆயிரம் வீடுகளை நிர்மாணிக்கும் இந்திய வீடமைப்புத் திட்டத்தின் 4 ஆம் கட்டத்தின் கீழ் இந்த ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டுள்ளன என்று இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளது.

இதற்கமைய, தேசிய வீடமைப்பு அதிகார சபை மற்றும் அரச பொறியியல் கூட்டுத்தாபனம் ஆகிய நிறுவனங்களுடன் இரண்டு தனி ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டுள்ளன.

6 மாகாணங்களின் 11 மாவட்டங்களில் நான்காம் கட்டத்தின் கீழ் இந்திய வீடமைப்புத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இலங்கையில் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள 60 ஆயிரம் இந்திய வீடமைப்புத் திட்டத்தின் கீழ் முதல் இரண்டு கட்டங்களிலும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் 46 ஆயிரம் வீடுகள் நிர்மாணிக்கப்பட்டன என்று இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளது.

இந்திய வீடமைப்புத் திட்டத்தின் மூன்றாம் கட்டத்தின் கீழ், பெருந்தோட்டப் பகுதிகளில் நடைமுறைப்படுத்தப்படும் 4 ஆயிரம் வீடமைப்புத் திட்டம் நிறைவடையும் நிலையில்



உள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையுடனான இந்தியாவின் மக்களை மையப்படுத்திய அபிவிருத்தி ஒத்துழைப்பு கூட்டுறவில் வீடமைப்புத் திட்டம் முக்கிய இடத்தைக் கொண்டுள்ளது என்று இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகராலயம் சுட்டிக்காட்டியுள்ளது.

இந்திய வீட்டுத் திட்டத்துக்கு அப்பால், இலங்கையின் 25 மாவட்டங்களில் பல்வேறு வீட்டுத் திட்டங்களின் கீழ் 2 ஆயிரத்து 400 வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வீதியைக் கடக்க முற்பட்ட பெண் காரில் மோதி பரிதாப உயிரிழப்பு

வீதியைக் கடக்க முற்பட்ட பெண் ஒருவர் காருடன் மோதி விபத்துக்குள்ளாகி உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்து காலி - கொழும்பு பிரதான வீதியில் அம்பலாங்கொடை, மாதம்பகம - வேனமுல்ல பகுதியில் நேற்று இடம்பெற்றுள்ளது.

வேனமுல்ல பிரதேசத்தில் தேங்காய் எண்ணெய் ஆலை ஒன்றை நடத்தி வந்த 50 வயதுடைய பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

காரின் சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

உயிரிழந்த பெண்ணின் சடலம் பலப்பிட்டிய ஆதார வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளது.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை அம்பலாங்கொடை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# மாவீரர் வார இறுதி நாளில் இரத்ததானம் வழங்கிய பிரித்தானியவாழ் தமிழ் மக்கள்




"உயிர் கொடுத்தவர்களுக்காக உதிரம் கொடுப்போம்" எனும் தொனிப்பொருளின் கீழ் பிரித்தானியாவில் வாழும் தமிழ் மக்கள் இரத்ததானம் வழங்கும் நிகழ்வை நடத்தினர்.

இந்த நிகழ்வு மாவீரர் வாரத்தின் இறுதி நாளான கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது.

இலங்கையில் வடக்கு - கிழக்கில் போரில் உயிர் நீத்த மக்கள் மற்றும் மாவீரர்களை நினைவுகூரும் வகையில் பிரித்தானியாவில் வாழும் தமிழ் மக்கள் கடந்த வாரம் முழுவதும் பல்வேறு நிகழ்வுகளை ஏற்பாடு செய்திருந்தனர்.

அதன் ஒருகட்டமாக கடந்த வாரம் திங்கட்கிழமை இலண்டனில் இரத்ததானம் வழங்கும் நிகழ்வு நடைபெற்றது.

இந்த நிகழ்வு நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதில் நூற்றுக்கணக்கான தமிழ் மக்கள் கலந்துகொண்டு இரத்ததானத்தை வழங்கினர்.


வடமாகாண மரநடுகை மாதம்
கார்த்திகை 01 - 30, 2023
“ஒரு தேசமாக நிலைத்திருக்க, ஒரு மாநிலமாக வளர,
மக்களாக வாழ எங்களிடம் மரங்கள் இருக்க வேண்டும்.”
தியோடர் ரூஸ்வெல்ற் - அமெரிக்காவின் 26ஆவது ஜனாதிபதி
ஆளுக்கொரு மரம் நடுவோம்
நாளுக்கொரு வரம் பெறுவோம்
கார்த்திகையில் மரநடுகை தேசத்தை மாத்திரமல்ல;
தமிழ்த் தேசியத்தின் ஆன்மாவையும் குளிரச்செய்யும்!
தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம்


AIRPORT PICKUP & DROP
COLOMBO - JAFFNA
WEDDING SERVICE
DAY RENTING
KDH
VAN FOR RENT A/C
CALL NOW
+94 773 776 882
+94 753 770 230

## இலங்கை - இந்திய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

– புதுடில்லியில் நேற்று மதியம் பத்திரிகையாளர்களைச் சந்தித்த சமயம் யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், வடக்கு மாகாண சபையின் முன்னாள் முதலமைச்சருமான நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் இப்படி வலியுறுத்தி இருக்கின்றார்.

ஈழத் தமிழர் நிலைமை தொடர்பான கருத்துப் பரிமாறல் அரங்கு ஒன்றில் பங்குபற்றுவதற்காக புதுடில்லி சென்றிருக்கும் ஈழத்தமிழ்ப் பிரமுகர்களில் நீதியரசர் விக்னேஸ்வரனும் ஒருவர் என்பது தெரிந்ததே.

இந்தக் கருத்துப் பரிமாறல் அரங்கை ஒட்டி நேற்றுப் பத்திரிகையாளர் சந்திப்பு நடைபெற்றது. அதில் விக்னேஸ்வரன் மேலும் தெரிவித்த கருத்துக்களின் சாரம் வருமாறு:–

இலங்கையில் தமிழர்களின் தாயகமான வடக்கு, கிழக்கை ஆக்கிரமித்துச் சூறையாடிக் கொண்டிருக்கின்றது சிங்கள இனவாத அரசு. காணிகள் ஆக்கிரமிப்பு, திட்டமிடப்பட்ட சிங்களக் குடியேற்றங்கள், புராதன தலங்கள் மற்றும் கோவில்கள் அழிப்பு என்று நீண்ட நாச வேலைகள் தொடர்கின்றன.

இவற்றில் இருந்து தமிழர் தாயகம் தப்பி பிழைப்பதற்கு, அதற்கு அதிகாரப் பகிர்வு நடைமுறையாக்கம் அவசியம்.

இலங்கை – இந்திய ஒப்பந்தம் மூலமான அதிகாரப் பகிர்வு முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். 13ஆம் திருத்தமும், அதன் கீழான மாகாண சபை முறைமையும் காலதாமதப்படுத்தப்படாமல் நடைமுறைக்கு வர வேண்டும். அது மாத்திரமல்ல, தமிழர் தாயகம் இப்போது இரண்டு வல்லாதிக்க சக்திகளின் (இந்தியா மற்றும் சீனா) மைதானமாக மாறும் சூழல் உள்ளது.

இலங்கை அரசு இரண்டு பக்கமும் விளையாடுகின்றது. சீனாவுடனும் நட்புப் பாராட்டி, இந்தியாவுடனும் குழைந்து தன் காரியங்களைச் சாதித்துக் கொண்டிருக்கின்றது.

ஆனால், தமிழர் தாயகமோ இந்தியாவுடன் மட்டும் தான் என்று தனது நிலைப்பாட்டில் உறுதியாக இருக்கின்றது. இந்த உறுதிப்பாட்டை இந்தியா சரிவரக் கைப்பற்றிக் கொள்ள வேண்டும்.

இலங்கை – இந்திய ஒப்பந்தம் மூலமான அதிகாரப் பகிர்வேனும் முழு அளவில் தமிழர்களுக்கு முழுமையாகக் கிட்டுவதை இந்தியா உறுதிப்படுத்த வேண்டும்.

இல்லையேல் தமிழர் தாயகமும் மாறி சிந்திக்கும் – கைகொடுப்பதற்கு, கைநீட்டிக் காத்திருக்கும் தரப்புகள் பக்கம் நாடும் – சூழ்நிலை ஏற்பட்டு விடும்.

அப்படி நேர்வது தமிழருக்கும் நல்லதல்ல, இந்தியாவின் பாதுகாப்புக்கும் உகந்ததல்ல.

ஆகவே, தனது பாதுகாப்பு எதிர்காலம் கருதியேனும் இந்தியா முன்னர் தான் இலங்கையுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தைச் சொல்லுக்குச் சொல் – வாசகத்துக்கு வாசகம் நடைமுறைப்படுத்தப்படுவதை உறுதி செய்ய வேண்டும்.

– இந்தச் சாரப்பட விக்னேஸ்வரன் அங்கு கருத்துத் தெரிவித்தார்.

## சித்திரவதைக் கூடமாகச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பொலிஸாரின் சித்திரவதைகளுக்குள்ளாகி சித்தங்கேணி இளைஞர் நாகராசா அலெக்ஸ் உயிரிழந்துள்ள நிலையில், அவர் சித்திரவதை செய்யப்பட்ட இடத்தைப் பார்வையிட்டு விஞ்ஞான ரீதியில் ஆய்வு செய்வதற்கு அலெக்ஸுடன் கைது செய்யப்பட்டுப் பிணையில் விடுவிக்கப்பட்ட இளைஞரை அழைத்துக்கொண்டு யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி, பொலிஸ் பரிசோதகர் தலைமையிலான குழுவினர் நேற்றுமுன்தினம் வட்டுக்கோட்டைப் பொலிஸ் நிலையத்துக்குச் சென்றிருந்தனர்.

இதன்போது சட்டத்தரணி கனகரத்தினம் சுகாஸும் அவர்களுடன் சென்றிருந்த நிலையில், அவர் நேற்று ஊடக அறிக்கையை வெளியிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:–

"நேற்று (நேற்றுமுன்தினம்) நீதிமன்றத்தின் கட்டளைக்கமைவாக வட்டுக்கோட்டைப் பொலிஸ் நிலையத்துக்குச் சென்று அலெக்ஸ் சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டதாகவும், தாக்கப்பட்டதாகவும், தடுத்துவைக்கப்பட்டதாகவும் கூறப்படும் இடங்களைச் சாட்சி காண்பித்தார்.

சாட்சியின் பாதுகாப்புக்காக நீதிமன்ற அனுமதியோடு நானும் சென்றிருந்தேன். அங்கு அவதானித்தவற்றின் அடிப்படையில் வட்டுக்கோட்டைப் பொலிஸ் நிலையம் சட்ட அடிப்படையிலான நிலையமாக அன்றி ஒரு சித்திரவதைக் கூடமாகவே செயற்பட்டு வருகின்றது என்பதை உணரமுடிகின்றது.

நீதிமன்ற விசாரணைகள் பாதிப்படையக்கூடாது என்பதற்காக ஏனைய விடயங்களை வெளிப்படுத்துவதை இவ்விடத்தில் தவிர்த்துக்கொள்கின்றேன்." – என்றுள்ளது.




# ஹோட்டல் முகாமையாளர் கத்தியால் குத்திக் கொலை

## வத்தளையில் பயங்கரம்



வத்தளை, நவம்பர். 30

வத்தளை, எலக்கந்த பகுதியில் அமைந்துள்ள ஹோட்டலின் முகாமையாளர் கத்தியால் குத்திக் கொலை செய்யப்பட்டார்.

இந்தச் சம்பவம் நேற்று இடம்பெற்றது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

ஓட்டோவில் வந்த நால்வரால் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மாத்தறையைச் சேர்ந்த 68 வயதான குடும்பஸ்தரே கொலை செய்யப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டுவரும் பொலிஸார், சந்தேகநபர்கள் இதுவரை கைது செய்யப்படவில்லை என்று குறிப்பிட்டனர்.

# கேரள கஞ்சாவுடன் பெண் ஒருவர் கைது



(மன்னார் நிருபர்)

மன்னார், பேசாலைப் பகுதியில் கேரள கஞ்சாவுடன் பெண் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

இராணுவப் புலனாய்வு அதிகாரிகளுக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் மன்னார் பொலிஸ் பிரிவு குற்றப் புலனாய்வுப் பிரிவினருடன் இணைந்து மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது பேசாலை பொலிஸ் பிரிவில் உள்ள ஒரு வீட்டை சோதனையிட்டபோது ஒரு கிலோ 30 கிராம் கேரள கஞ்சாவுடன் குடும்பப் பெண் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

இந்தப் பெண் நீண்ட காலமாக இந்தக் கடத்தலை மேற்கொண்டு வருகின்றார் என்று தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்ட கஞ்சாவுடன் சந்தேகநபரான பெண் மேலதிக விசாரணைகளுக்காக பேசாலை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டார்.



## முதலை கடித்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...) குடும்பஸ்தரைத் தண்ணீருக்குள் முதலை இழுத்துச் சென்று கடித்துள்ள நிலையில் அந்த நபர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வயல் ஒன்றைப் பார்வையிட்டு வரும் கணவனும் மனைவியும் நேற்றுப் பகல் குளிப்பதற்காகக் குளத்துக்குச் சென்ற போது கணவரை முதலை இழுத்துச் சென்றுள்ளது என்று விசாரணையின் மூலம் தெரியவந்துள்ளது.

தோப்பூர் – பாட்டாளிபுரத்தில் வசித்து வரும் கதிர்காமத்தம்பி நிதுர்ஷன் (வயது 20) எனும் இளம் குடும்பஸ்தரே உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பிரதேச மக்கள் ஒன்றிணைந்து பல மணி நேரம் குளத்தில் தேடுதல் மேற்கொண்ட பின்னர் சடலம் மாலை 5.30 மணியளவில் மீட்கப்பட்டுள்ளது.

சடலம் மூதூர் தள வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான விசாரணைகளை சம்பூர் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## பளையில் கோர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...) இடம்பெற்றுள்ளது என்று பளை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பளை நகரப் பகுதியில் இருந்து புலோப்பளை நோக்கிச் சென்ற மோட்டார் சைக்கிளும் புலோப்பளையில் இருந்து பளை நகரப் பகுதியை நோக்கி வந்த மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் மோதி விபத்து ஏற்பட்டுள்ளது.

இந்த விபத்தில் 20 வயதுடைய குணம் கணேசன் என்ற பளையைச் சேர்ந்த இளைஞரே உயிரிழந்துள்ளார்.

விபத்தில் பலத்த காயங்களுக்குள்ளான இருவர் பளை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைகளுக்காக கிளிநொச்சி பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

இது தொடர்பிலான மேலதிக விசாரணைகளைப் பளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பெயர்களைப் பிரேரிக்கும் தினம் இன்று நவம்பர் 30ஆம் திகதியுடன் முடிவடைகின்றது., மாவை சேனாதிராஜாவின் பெயர் இதுவரை பிரேரிக்கப்படவில்லை. இன்று கடைசி நாள் பிரேரிக்கப்படுவதற்கான ஆயத்தங்கள் ஏதும் நடப்பதாகவும் தெரியவில்லை. ஆக, மாவை சேனாதிராஜாவின் பத்தாண்டுகள் கட்சியின் தலைமைப் பதவிக்காலம் ஜனவரி மாதத்தில் பெரும்பாலும் முடிவுக்கு வரலாம்.

எதிர்பார்த்தபடி கட்சியின் தலைமைக்கு நேரடிப் போட்டிதான். நேற்று இரவு வரை இரண்டு பெயர்களே பிரேரிக்கப்பட்டிருக்கின்றன.

ஒருவர் – எம்.ஏ.சுமந்திரன் எம்.பி.

மற்றவர் – சிவஞானம் ஸ்ரீதரன் எம்.பி.

கட்சியின் பதில் பொதுச் செயலாளர் மற்றும் நிர்வாகச் செயலாளர் ஆகிய இருவரிடமும் மேற்படி இருவரின் பெயர்களடங்கிய பிரேரிப்புக் கடிதங்களே நேற்று இரவு வரை ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன. அதற்கான கால அவகாசம் இன்று வரை உள்ளது. எனினும் புதிய பிரேரிப்புப் பத்திரங்கள் ஏதும் இன்று வந்து சேருவதற்கான சாத்தியங்கள் இருப்பதாக இதுவரைத் தெரிய வரவில்லை.

மேற்படி இருவரில் ஒருவரான ஸ்ரீதரன் இப்போது புதுடில்லியில் இருக்கிறார். 27ஆம் திகதி மாவீரர் தின அனுஷ்டானங்களைக் காத்திரமாக செய்வித்து முடித்துக் கொண்டு, புதுடில்லி பறந்து விட்டார் ஸ்ரீதரன். புறப்படுவதற்கு முன்னர் கட்சியின் தலைமை பதவிக்குத்தான் போட்டியிடுவதை உறுதிப்படுத்தி பிரேரிக்கும் பத்திரங்கள் செயலாளரிடம் ஒப்படைக்கப்படுவதை உறுதிப்படுத்திவிட்டே அவர் புறப்பட்டார்.

எனினும் புதுடில்லிக்குப் போகும் அவசரத்தில், தமது பெயர் பிரேரிப்புப் பத்திரத்தில் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த தமிழரசுப் பிரமுகர்களிடம் மட்டுமே அவர் ஒப்பம் பெற்றிருக்கின்றார் என்று தெரிகின்றது.

ஒரு வேட்பாளரின் பெயரை குறைந்தது ஆறு பொதுக்குழு உறுப்பினர்களாவது ஒப்பமிட்டுப் பிரேரிக்க வேண்டும்.

ஸ்ரீதரனின் பெயரை முன்னாள் வடக்கு மாகாண சபைக் கல்வி அமைச்சர் குருகுலராஜா, கரைச்சிப் பிரதேசபையின் முன்னாள் தலைவர் வேழமாலிகிதன் மற்றும் ஒரு முன்னாள் பிரதேச சபைத் தலைவர் என கிளிநொச்சி மாவட்டத்தை சேர்ந்த அறுவரே பிரேரித்துள்ளனர்.

ஆனால் சுமந்திரனின் பெயரை தமிழர்கள் வாழும் எட்டு மாவட்டங்களில் இருந்தும் (யாழ்ப்பாணத்தில் இருந்து மட்டும் நால்வர்) என 11 பேர் பிரேரித்துள்ளனர். அத்தோடு கொழும்புக் கிளையிலிருந்தும் ஒருவர் பிரேரித்து ஒப்பமிட்டுள்ளார் எனத் தெரிகின்றது. ஒவ்வொரு மாவட்டத்திலும் தமிழரசுக் கட்சியின் மூத்த பிரமுகர் ஒருவர் சுமந்திரனின் பெயரைப் பிரேரித்து ஒப்பமிட்டு இருக்கின்றமை கவனிக்கத்தக்கது.

சுமந்திரனுக்கு முதலாவது ஒப்பம் யாழ்ப்பாணம் மாவட்டத்திலிருந்து கட்சியின் சிரேஷ்ட உப தலைவர் சி.வி.கே. சிவஞானம் வைத்துள்ளார். மற்றும் கட்சியின் நிர்வாகச் செயலாளர் குலநாயகம், முன்னாள் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சொலமன் சிறில், பருத்தித்துறையைச் சேர்ந்த மூத்த கட்சி உறுப்பினரான சாமிஅய்யா என்று அழைக்கப்படும் குமாரகுருசாமி ஆகியோர் ஒப்பமிட்டுள்ளனர். திருகோணமலையைச் சேர்ந்த ஜேம்ஸ் சமர்த்தர், மன்னாரிலிருந்து கட்சியின் மூத்த உறுப்பினரும் நானாட்டான் பிரதேச சபை முன்னாள் தலைவருமான தி.பரஞ்சோதி, கொழும்புக் கிளையில் இருந்து மூத்த உறுப்பினர் இரட்ணவடிவேல் என மொத்தம் 12 பேர் ஒப்பமிட்டுள்ளனர்.

தலைவர் தெரிவை ஜனவரி 21 ஆம் திகதியும், கட்சியின் தேசிய மாநாட்டை ஜனவரி 27 ,28 ஆம் திகதிகளிலும் நடத்த மத்திய குழுவில் தீர்மானிக்கப்பட்டிருந்தது. இப்போது எல்லாவற்றையும் ஒன்றாக ஜனவரி 27, 28 ஆம் திகதியே திருகோணமலையில் நடத்தி முடிப்பது என்று தீர்மானிக்கப்பட்டு காரியங்கள் மள மளவென்று நடைபெறுகின்றன என்றும் கூறப்பட்டது.

திட்டமிட்டபடி திருகோணமலையில் ஜனவரி 27, 28ஆம் திகதிகளில் மாநாட்டை நடத்தி முடிப்பதற்கு தேவையான ஹோட்டல்கள், மண்டபங்கள் பதிவு செய்யப்பட்டு விட்டன என்றும் ஒரு தகவல் கிட்டியது.

இன்னும் இரண்டு மாதங்களில் தமிழரசுக் கட்சிக்கு ஒரு புதுத் தலைவர் வருவார் என்று நிச்சயம் நம்பலாம்.

கடைசியில் பிள்ளையார் கல்யாணம் நடக்கத்தான் போகின்றது...!

## சர்ச்சைக்குரிய போதகர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இருந்து கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்துக்கு நேற்று அதிகாலை வந்தடைந்தார் என்று குடிவரவு – குடியகல்வுத் திணைக்களத்தின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

மேலும் நீதிமன்றம் வழங்கிய உத்தரவின் அடிப்படையில் அவர் 48 மணித்தியாலங்களுக்குள் குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் வாக்குமூலம் வழங்கவுள்ளார்.

ஜெரோம் பெர்ணான்டோ கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்துக்கு வரும் போது அவரைக் கைது செய்ய வேண்டாம் எனவும், அவர் இலங்கை வந்ததும் 48 மணி நேரத்துக்குள் அவரிடம் வாக்குமூலம் பெறுமாறும் சி.ஐ.டிக்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

மத நல்லிணக்கத்துக்குத் தீங்கு விளைவிக்கும் வகையில் கருத்து வெளியிட்டமைக்காக அவரைக் கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த நிலையில் அவர் நாட்டை விட்டு வெளியேறியமை குறிப்பிடத்தக்கது.



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## விக்கி கூறும் ஆலோசனை

பல்வேறு கண்டங்களில் இருந்தும், இலங்கையில் இருந்தும் புதுடில்லிக்குச் சென்றிருக்கும் ஈழத்தமிழர் பிரதிநிதிகள், இலங்கை தமிழர் நிலைமைகள் குறித்து புதுடில்லியில் சம்பந்தப்பட்ட தரப்புகளுக்கு எடுத்தியம்பும் முயற்சியில் ஈடுபட்டிருக்கின்றனர்.

இலங்கையில் இருந்து சென்றிருக்கும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரன் ஈழத் தமிழரின் நிலைமைகள், விளைவுகள், பாதிப்புகள் குறித்து நேற்று அங்கு தங்களைச் சந்தித்த புதுடில்லிப் பத்திரிகையாளர்கள் மற்றும் பிரமுகர்களிடம் விலாவாரியாக எடுத்துரைத்திருக்கின்றார் என்று தெரிகிறது.

யதார்த்தப்புறநிலைமைகளைத்தெளிவுபடுத்தும் அவரது கருத்துக்கள் புதுடில்லியில் கேட்கப்பட வேண்டிய தரப்புகளின் காதுகளில் விழுமா என்பதுதான் கேள்வி.

சீனா, இந்தியா என்ற இரு வல்லாதிக்க சக்திகளின் மோதல் களமாகத் தமிழர் தாயகம் உருவெடுக்கக்கூடிய ஆபத்து ஏது நிலை ஏற்பட்டிருப்பதை நேரடியாக - வெளிப்படையாக - கூறாவிட்டாலும், பூடகமான கருத்தியல் சொல்லாடல்கள் மூலம் நீதியரசர் விக்னேஸ்வரன் எடுத்துரைத்திருக்கின்றார் என்று தெரிகின்றது.

இலங்கை தீவை ஆளும் பௌத்த - சிங்களத் தரப்புகள் சீனாவுக்கு ஒரு முகத்தையும், இந்தியாவுக்கு பிறிதொரு முகத்தையும் காட்டியபடி, தமது காரியத்தை வெற்றிகரமாகச்சாதித்துக்கொண்டிருக்கின்றன. ஆனால், வடக்கு - கிழக்கு தமிழர் தாயகமோ எப்போதும் தான் இந்தியா பக்கமே என்று சலனமில்லாமல் உறுதியாக நிற்கின்றது. எனினும், அந்த உறுதியான நிலைப்பாட்டை இந்தியா தானும் பங்களித்துப் பற்றி நின்று, அந்த உறவை நிலை நிறுத்துவதில் காத்திரமான பங்களிப்பைக் காட்டாமல், தெளிவற்றுத் தடுமாறுவதாக தமிழர்கள் எண்ணும் நிலைமையே இங்கு நீடிக்கின்றது என்ற கருத்துப்பட விக்னேஸ்வரன் அங்கு விடயங்களை விளக்கி இருக்கின்றார்.

இலங்கை - இந்திய ஒப்பந்த ஏற்பாடுகளும், 13 ஆவது திருத்த சரத்துக்களும் முழு அளவில் நடைமுறைப்படுத்தப்படுவதை உறுதி செய்வதில் இனிமேலும் இந்தியா தெளிவற்ற நிலைப்பாடு எடுக்காமல், உறுதியாகச் செயற்பட வேண்டியது அவசியம் என்பதை விக்னேஸ்வரன் வலியுறுத்துகின்றார். அதிகாரப் பகிர்வுக்கான இணக்கப்பாடு இந்திய முத்திரையோடு நடைமுறைப்படுத்தப்படுவதற்கு, மாகாண சபைகள் அவற்றுக்கு வழங்கப்பட்ட முழு அதிகாரங்களுடனும் இங்கு செயற்படுத்தப்பட வேண்டும். இல்லையேல், புதிய அரசமைப்பு ஏற்பாடு என்ற பெயரில் இலங்கை - இந்திய ஒப்பந்த இணக்கப்பாட்டை அடியோடு இலங்கை இல்லாமல் செய்யவும் வாய்ப்பு ஏற்படும் என்ற ஆபத்தை விக்னேஸ்வரன் சுட்டிக் காட்டி இருக்கின்றார்.

இந்தியாவின் பங்களிப்புடன் - உறுதிப்பாட்டுடன் - கூடிய அதிகாரப் பகிர்வு இல்லாமல் செய்யப்படுவது தமிழர் தாயகத்தில் காலூன்றப் பார்த்திருக்கும் சீனாவுக்கு வாய்ப்பான களநிலைமையை ஏற்படுத்திக்கொடுத்துவிடும்என்றஆபத்தையும்விக்னேஸ்வரன் புதுடில்லியில் பத்திரிகையாளருக்கு விளக்கி இருக்கின்றார்.

ஆகவே அதிகாரப் பகிர்வு - அதுவும் இலங்கை-இந்திய ஒப்பந்தம் மற்றும் 13ஆம் திருத்தம் ஊடான அதிகார பகிர்வு - நடைமுறைப்படுத்தப்படுவது தமிழரின் நலனுக்கு மட்டுமல்லாமல், சீனாவை வடக்குக் கிழக்கில் காலூன்ற இடமளிக்காமல் செய்வதன் மூலம் இந்தியாவின் நலனுக்கும் முக்கியம் என்று நீதியரசர் விக்னேஸ்வரன் விளக்குவது புதுடில்லிக்குப் புரிந்தால் சரி. புரியாவிட்டால் இலங்கைத் தமிழருக்கு மட்டுமல்ல, அதையும் தாண்டி புதுடில்லிக்கும் கூட பெரும் பாதிப்புதான்...!

## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை - 2023

"இயற்கையே எனது இறைவன். எனக்கு இயற்கை புனிதமானது, மரங்கள் என் கோயில்கள், காடுகள் என் தேவாலயங்கள்."

**- மிகைல் கோபர்ச்சேவ்**
**(சோவியத்யூனியனின் முன்னாள் அதிபர்)**



# இலங்கையில் பொருளாதாரம் ஸ்திரமடைய கடும் பொருளாதார மறுசீரமைப்பு அவசியம்

## ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

இலங்கையில் பொருளாதார ஸ்தீர நிலையை ஏற்படுத்த கடுமையான பொருளாதார மறுசீரமைப்பு அவசியம் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

புதிய பொருளாதாரக் கொள்கைக் கட்டமைப்புக்குள் சகலரதும் அர்ப்பணிப்புடன் செயற்படுவதன் ஊடாக வீழ்ச்சியடையாத வலுவான பொருளாதாரத்தை உருவாக்க முடியும் என்றும் ஜனாதிபத சுட்டிக்காட்டினார்.

கொழும்பு ஷங்ரிலா ஹோட்டலில் நேற்றுமுன்தினம் ஆரம்பமான 2023 இலங்கை பொருளாதார மாநாட்டில் ஆரம்ப உரையை ஆற்றிய போதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டார்.

இலங்கை வர்த்தக சம்மேளனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த மாநாடு இரண்டு நாட்கள் நடைபெற்றது.

கடந்த ஒரு வருடத்தில் அரசு மேற்கொண்ட கடுமையான பொருளாதார




மறுசீரமைப்பு மூலம் இந்த நாட்டின் பொருளாதாரத்தில் ஓரளவு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது என்றும், அதனைத் தொடர்ந்தும் நடைமுறைப்படுத்த வேண்டும் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

மேலும் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூறியதாவது:–

"இந்த நாட்டின் பொருளாதார மீட்சிக்காக கடந்த வருடத்தில் நாம் முன்னெடுத்த வேலைத்திட்டத்தை பொருளாதார மறுசீரமைப்பு என்று கூற முடியுமா எனத் தெரியவில்லை. மறுசீரமைப்பு என்ற வார்த்தையின் அர்த்தத்தை பார்த்தால் சில வாரங்களுக்கு முன்னர் பொருளாதாரத்திற்கு நாம் மேற்கொண்டது மறுசீரமைப்பு அல்ல. இது ஒரு முழுமையான மீளமைப்பு அல்லது ஒரு தீவிர மறுசீரமைப்பு என்று சொன்னால் தவறில்லை. எம்மால் திரும்பிச் செல்ல முடியாது. இதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

இப்போது நாம் வேலை செய்ய வேண்டும். இந்தப் புதிய பொருளாதாரக் கொள்கை கட்டமைப்பிற்குள் நாம் செயல்பட வேண்டும். நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கான இந்த ஆழமான பொருளாதார மறுசீரமைப்பு முயற்சிகளில் நாம் இதுவரை குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை அடைய முடிந்தது.

கடந்த சில மாதங்களில், எமது நாட்டிலுள்ள அனைத்து கடன் வழங்குநர்களுடனும் முழுமையான நம்பிக்கையுடன் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டோம். இலங்கையின் வெளிப்படைத்தன்மை மற்றும் நல்லெண்ணம் காரணமாகவே இந்தச் செயற்பாட்டில் வெற்றிபெற முடிந்தது.

இலங்கையில் கடன் மறுசீரமைப்புக்கு கொள்கையளவில் உடன்பாடு வழங்கிய முதலாவது வங்கி சீனா எக்ஸிம் வங்கியாகும். உத்தியோகபூர்வ கடன் வழங்குநர்கள் குழு மிக விரைவில் கொள்கையளவில் இதேபோன்ற உடன்பாட்டை வழங்கும் என்று நம்புகிறோம்.

மேலும், எதிர்வரும் டிசம்பரில் இலங்கையின் விரிவாக்கப்பட்ட நிதி வசதி திட்டத்தின் முதல் மீளாய்வை சர்வதேச நாணய நிதியம் நிறைவு செய்யும் என்று



எதிர்பார்க்கப்படுகிறது.

ஒரு நாடாக நாம் எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்தவிருக்கும் பொருளாதாரக் கொள்கைகள் இந்தப் பேச்சுகளில் உள்ளடங்கும். அதிலிருந்து



நாம் பின்வாங்கினால், கடன் வழங்குநர்கள் அதற்கு எதிராக நடவடிக்கை எடுக்க முற்படுவார்கள். அதன்படி, இந்த ஒப்பந்த கட்டமைப்பிற்குள் நாம் செயல்பட வேண்டும்.

ஏனெனில் இந்த நீண்ட கால உடன்படிக்கையை இழந்தால் அடுத்து யார் ஆட்சிக்கு வந்தாலும் நாட்டின் பொருளாதார வீழ்ச்சியை தடுக்க முடியாது. எனவே, இந்தப் பொருளாதாரக் கட்டமைப்பிற்குள் நாம் செயல்பட வேண்டும். இது ஒரு கடுமையான பொருளாதார மறுசீரமைப்பு என்றுதான் சொல்ல வேண்டும். மேலும் போட்டி நிறைந்த பொருளாதாரத்திற்கு நாம் செல்ல வேண்டும்.

பொருளாதார நெருக்கடியின் போது மேடைகளில் இருந்து தீர்வுகளைப் பற்றி பேசிய அரசியல் தலைவர்கள் இந்த திட்டத்தை அங்கீகரிக்கவில்லை. ஆனால், அவர்கள் இதுவரை எந்த தீர்வையும் முன்வைக்கவில்லை. ஒரு நாடாக, நாம் என்றென்றும் வங்குரோத்து நிலையில் இருக்க முடியாது. எனவே, நாட்டை வங்குரோத்து நிலையில் இருந்து மீட்க்கும் வகையில் தற்போது செயல்பட்டு வருகின்றோம்.

நாங்கள் போட்டித்தன்மையுடன் செயற்பட விரும்பாததால் ஏற்றுமதி பொருளாதாரத்திற்கு நாங்கள் தயாராக இல்லை. ஆனால், இப்படியே தொடர்ந்து செல்ல முடியாது. இதுவே எங்களுக்குக் கிடைத்துள்ள கடைசி வாய்ப்பு.

பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள வேண்டுமானால், இந்தப் புதிய பொருளாதாரக் கொள்கை கட்டமைப்பிற்குள் நாம் செயல்பட வேண்டும்.

அதிலிருந்து நாம் பின்வாங்கினால் இன்னும் 10 வருடங்களில் இந்த நாடு மீண்டும் பொருளாதார நெருக்கடியைச் சந்திப்பதை தடுக்க முடியாது. அந்த நிலைக்கு திரும்புவதை நாம் யாரும் விரும்பவில்லை. எனவே, நீங்கள் அனைவரும் மிகவும் போட்டித்தன்மையுடன் செயற்பட வேண்டும். எங்களிடம் சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்கள் உள்ளன. எனவே போட்டித்தன்மைக்கு முகங்கொடுத்து முன்னேற வேண்டும்." – என்றார்.



அதன் பின்னர், இலங்கை வர்த்தக சம்மேளனத்தின் தலைவர் துமிந்த ஹுலங்கமுவ வழிநடத்திய கலந்துரையாடலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் இணைந்துகொண்டார். இந்திய திட்டமிடல் ஆணைக்குழுவின் பிரதித் தலைவர் மொன்டெக் சிங் அலுவா

(10ஆம் பக்கம் பார்க்க...)





(9ஆம் பக்கத் தொடர்ச்சி...)

லியாவும் இந்தக் கலைந்துரையாடலில் இணைந்துகொண்டார்.

ஜனாதிபதியிடம் கேட்கப்பட்ட கேள்விகளும் வழங்கப்பட்ட பதில்களும் பின்வருமாறு:–

கேள்வி:– ஜனாதிபதி அவர்களே, வரி வருமானம் 18மூ வரையில் உயர்வடைந்தது. குறிப்பாக மதுவரி மற்றும் சுங்கத் திணைக்களம் உட்பட அனைத்து வரி சேகரிப்பு முறைகளையும் விரிவுபடுத்துவதற்கான திட்டமொன்று உள்ளதா?

பதில்:– அது தொடர்பில் முயற்சிகளை முன்னெடுத்து வருகிறோம். வருமான அதிகாரசபையொன்றை நிறுவவும் எதிர்பார்க்கிறோம். மேலும் அடுத்த சில வாரங்களில் வரி தொடர்பான சட்டங்கள் பலவற்றை கொண்டு வரவும் எதிர்பார்க்கிறோம்.

ஒரே இரவில் அனைத்து செயன்முறைகளையும் உருவாக்குவது சாத்தியமற்றது. அதற்கு இரண்டு, மூன்று வருடங்கள் அவசியப்படும். இருப்பினும் நாம் தற்போதும் குறிப்பிடத்தக்க மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளோம்.

பிரித்தானியர் காலத்திலும் 1970களின் ஆரம்ப பகுதியிலும் மாவட்ட வருமான அதிகாரியொருவர் இருந்தார். வருமானம் சேகரிக்கும் பொறுப்பை அவர்கள் ஏற்றுக்கொண்டனர். அவர்களுக்கு உதவுவதற்கான அரச அதிகாரியொருவரும் இருந்தார். அவர்களால் வருமானம் சேகரிக்கப்பட்டது.

எவ்வாறாயினும், மாவட்டச் செயலாளர் நிதி சேகரிக்கும் வழிமுறை தொடர்பில் ஆராய்வதற்கு மாறாக நிதியை செலவிடும் முறைமை தொடர்பில் தேடியறிவதற்கான செயன்முறையொன்று நாட்டில் உருவாகியுள்ளது.

அதனால் வரி சேகரிப்புக்காக பிரதேச கட்டமைப்புக்குள் செல்ல வேண்டிய அவசியம் ஏற்படும். அது ஒருங்கிணைப்பு அல்லது மாவட்ட வருமான அதிகாரி என்ற முறைமைக்கு நிகரானதாக அமையக்கூடும். இது கடினமான செயற்பாடாக அமைந்தாலும் அதனை செய்ய வேண்டியது அவசியமாகும்.

கேள்வி:– சர்வதேச நாணய நிதியத்தின் அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. நிர்வாக கட்டமைப்பை மேம்படுத்தல் மேற்பார்வைச் செயற்பாடுகளில் முக்கியமானது எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அரச துறையின் நிர்வாகச் செயற்பாடுகளின் மேம்பாட்டிற்காக அரசாங்கம் எவ்வாறான நடவடிக்கைகளை எடுத்துள்ளது?

பதில்:– ஆங்கில மொழியிலிருக்கும் அந்த அறிக்கை தமிழ், சிங்கள மொழிகளில் மொழிபெயர்ப்புச் செய்யப்படுகிறது. திறைசேரியின் செயலாளர் குறிப்பிட்டதை போல தொழில்நுட்ப சொற்கள் பல அறிக்கையில் உள்ளன. அவ்வாறான அறிக்கையை மொழிபெயர்ப்புச் செய்ய சிறிது காலம் அவசியப்படும். ஜனவரி மாதமளவில் அவற்றை பெற்றுக்கொடுக்க முடியும் என நம்புகிறேன்.

அறிக்கையின் பரிந்துரைகள் மற்றும் மேற்பார்வை நடவடிக்கைகளுக்காக பாராளுமன்ற மேற்பார்வை குழுவொன்று நியமிக்கப்படும். அதனை மிகவும் வெளிப்படைத் தன்மையுடன் முன்னெடுக்க வேண்டும்.

பிரித்தானியர் காலத்தில் தயாரிக்கப்பட்ட கட்டமைப்புக்களையே நாம் இன்று வரையில் பயன்படுத்துகின்றோம். அதனால் முழுமையான கட்டமைப்பினையும் மீளத் தயாரிப்பது தொடர்பில் கவனம் செலுத்தியுள்ளோம். அதனை நவீனமயப்படுத்த சிறிது காலம் அவசியப்படும்.



கேள்வி:– தாய்லாந்து, சீனா போன்ற நாடுகளுடனான சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் பற்றிய பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அதன் தற்போதைய நிலைமை எவ்வாறு உள்ளது?

பதில்:– இது குறித்து சிங்கப்பூருடன் ஒரு இணக்கப்பாட்டை எட்டியுள்ளோம். மலேசியாவும் எம்மோடு சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தை செய்துகொள்ள இணக்கம் தெரிவித்துள்ளது. அவர்களுடனான பேச்சுகளையும் ஆரம்பிப்போம்.

வலயத்தின் நீண்ட பொருளாதார கூட்டமைப்பான ஆர்.சி.ஈ.பியில் இல் இணைந்துகொள்ள விண்ணப்பித்துள்ளோம். அதில் எம்மை இணைத்துக்கொள்ள தயார் என்றும் அதற்கான செயன்முறை ஒன்றை தயாரிக்க எதிர்பார்த்திருப்பதாகவும் அவர்கள் அறிவித்துள்ளனர். அத்தோடு புதிய உறுப்பினர்களை இணைத்துக்கொள்வதற்கான செயன்முறையொன்று அவர்களிடத்தில் இல்லை என்றும் அறிவித்துள்ளமையினால் அந்தச் செயற்பாடுகளுக்கு சிறிது காலம் அவசியப்படும்.

இந்தியாவுடன் நாம் மீண்டும் பேச்சுக்களை ஆரம்பிக்கலாம். இருப்பினும் இந்தியா முதலீடு மற்றும் வர்த்தகத்துக்கு மற்றுமொரு ஒப்பந்தம் அவசியப்படுவதாக அறிவித்துள்ளது. அது தொடர்பாக பேச்சுவார்தைகளை ஆரம்பித்துள்ளோம். அந்த பேச்சுவார்தைகள் நிறைவுற்ற பின்னர் பங்களாதேஸ்டனும் பேச்சுவார்த்தைகளை முன்னெடுப்போம். அதற்கு இணையாக ஆர்.சி.ஈ.பி. உடனான பேச்சுகளும் ஆரம்பிக்கப்படும்.

சீனா 7 வருடங்களாக எம்மோடு பேச்சில் ஈடுபட்டு வருகிறது. தற்போது நாம் ஒப்பந்தத்தில் கைசாத்திட ஆரம்பித்துள்ளோம். இந்நிலையில் இன்னும் ஐந்து, ஆறு வருடங்களில் நாம் உலகத்திற்காக கதவுகளைத் திறப்போம். இருப்பினும் சீனா தொடர்பில் இன்னும் சில காலம் அவசியம் என்பதே எமது நிலைப்பாடாகும்.

அதேபோல் ஐரோப்பிய சங்கம், ஜி.எஸ்.பி. பிளஸ் மற்றும் அதனைத் தாண்டிச் செல்ல நாம் எதிர்பார்க்கின்றோம். அதேபோல் நாம் எதிர்காலத்தில் கிழக்கு, தென் ஆபிரிக்க நாடுகளுடனும் பேச்சு நடத்துவோம் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா, நிதி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன, முன்னாள் மத்திய வங்கி ஆளுநர் இந்திரஜித் குமாரசுவாமி, உள்நாட்டு வெளிநாட்டு இராஜதந்திரிகள், இலங்கை வணிகச் சபை உறுப்பினர்கள், வர்த்தகர்கள் உள்ளிட்ட பலரும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டிருந்தனர்.



# மணிமேகலைப் பிரசுர நூல்கள் இன்று யாழ் நகரில் கண்காட்சி

சென்னை மணிமேகலை பிரசுரத்தின் புத்தகக் கண்காட்சி இன்று 30-ஆம் திகதி வியாழக்கிழமை காலை 10 மணி முதல் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக கேட்போர் கூடத்தில் நடைபெறுகின்றது.

இலங்கை தமிழ் எழுத்தாளர்கள் பலருடைய முக்கிய நூல்கள் இந்த கண்காட்சியில் இடம்பெற இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

புத்தக ஆர்வலர்கள் இந்த நிகழ்வில் பங்குபற்ற அழைத்துள்ளார் மணிமேகலைப் பிரசுர நிர்வாக இயக்குநர் முனைவர் ரவி தமிழ்வாணன்.

# சுவிஸில் உணர்வெழுச்சியுடன் மாவீரர்களுக்கு அஞ்சலி



சுவிஸ் வாழ் தமிழ் மக்களால் மாவீரர் நாள் உணர்வெழுச்சியுடன் அனுஷ்ட்டிக்கப்பட்டது. இதில் மாவீரர்களின் உறவுகள் கலந்துகொண்டு மாவீரர்களை நினைவேந்தி அஞ்சலி செலுத்தினர்.














# சிறுத்தையின் உடல் பரிசோதனைக்காக ரந்தனிகலை மிருக வைத்தியசாலைக்கு!

(மஸ்கெலியா நிருபர் செ.தி.பெருமாள்)

மஸ்கெலியா பொலிஸ் பிரிவில் உள்ள புரவுன்ஷீக் தோட்ட டனட்டர் பிரிவில் மீட்கப்பட்ட 4 அடி உயரம் 6 அடி நீட்டம் கொண்ட – சுமார் 6 வயது மதிக்கத்தக்க – சிறுத்தையின் உடலம் ஹட்டன் நீதிமன்ற நீதிவானின் முன்பாக முன்னிலைப்படுத்தப்பட்டதாக நல்லதண்ணி வன பாதுகாப்பு அதிகாரி ரத்நாயக்க தெரிவித்தார்.

தேயிலைச் செடிகளின் கீழ் கட்டப்பட்ட கம்பி வலையில் சிக்கி இறந்த நிலையில் இந்த சிறுத்தையின் உடலம் நேற்று மீட்டு எடுக்கப் பட்டிருந்தது.

சிறுத்தையின் உடலம் நீதவான் பணிப்புரை யின் படி ரந்தெனிகல மிருக வைத்திய சாலைக்கு கொண்டு செல்ல பட்டு அங்கு பரிசோதனை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப் பட உள்ளது என வனப் பாதுகாப்பு அதிகாரி மேலும் கூறினார்.

நீதிமன்ற உத்தரவுப்படி சிறுத்தையின் உடலத்தை ரந்தெனிகல மிருக வைத்தியசாலைக்கு நல்லதண்ணி வனத்துறையினர் கொண்டு சென்று உள்ளனர்.





# புத்தரே வெட்கித் தலைகுனியும் விதத்தில்தான் அரசின் செயற்பாடுகள் அமைந்திருக்கின்றன!

## கஜேந்திரகுமார் எம்.பி. நேற்று நாடாளுமன்றத்தில் சாட்டை



புத்த பெருமான கூட வெட்கித் தலைகுனியக்கூடிய அளவுக்குத்தான் அரசாங்கத்தின் செயற்பாடுகள் அமைந்திருக்கின்றன என தமிழ்த் தேசிய மக்கள் முன்னனியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

பொது நிர்வாக அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு தொடர்பாக நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற விவாதத்தின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

அம்பாறை மாவட்டம், கல்முனை வடக்கு பிரதேச செயலகம் 1989 ஆண்டு புதிய பிரதேச செயலர் பிரிவாக அங்கீகரிக்கப்பட்டது. 1993 இல் அமைச்சரவைப் பத்திரத்தினூடாக அங்கீகரிக்கப்பட்ட தனி பிரதேச செயலாளர் பிரிவாக இயங்குவதற்கு அங்கீகரிக்கப்பட்டு, அது உத்தியோக பூர்வமாக இயங்கி வந்தது. காலப் போக்கில், முழுமையாக பிரதேச செயலாளர் பிரிவாக இயங்குவதற்குரிய கணக்காளர் போன்ற முக்கியமான நியமனங்களை அதற்கென வழங்காமல், அரசியல் காரணங்களுக்காக கல்முனை முஸ்லிம் பிரதேச செயலர் பிரிவுக்கு நியமனம் செய்து கல்முனை வடக்கு பிரதேச செயலம் உப பிரிவாகவே செயற்பட்டு வருகின்றது.

இதனால் மக்களுக்கு தேவையான நிர்வாகத்தை நடத்த முடியாமலும், அரசியல் காரணங்களால் பழிவாங்கல்களும் நடைபெற்று வருகின்ற நிலையில், கடுமையான பாதிப்புக்களை தமிழ் மக்கள் சந்திக்கிறார்கள். இதன் காரணமாக, ஏற்கனவே வர்த்தமானி மூலம் அங்கீகரிக்கப்பட்டு எடுக்கப்பட்டிருந்த முடிவை அமுல்படுத்துவதற்கு இன்றைக்காவது நடவடிக்கை எடுக்க முன்வரவேண்டும். இந்தவிடயத்தை பல வருடங்களாக கேட்டுக் கொண்டு வருகின்றோம். ஆனாலும் எதுவும் நடைபெறாமல் உள்ளது. இதனைத் தடுத்து நிறுத்துவதற்கு எந்தவொரு நியாயமான காரணங்களும் கிடையாது.

வடக்கு, கிழக்கில் தமிழ் மக்கள் வாழும் ஏனைய பிரதேசங்களில் முஸ்லிம் பிரிவுகள், சிங்களப் பிரிவுகள் உருவாக்கப்பட்டுள்ளன. சட்டவிரோத குடியேற்றங்கள் நடந்திருந்தும் கூட அந்த சட்டவிரோதமான செயலை சட்ட பூர்வமாக்குகின்ற வகையில் அந்தப் பிரிவுகளை உருவாக்க முடியுமானால், இயல்பாகவே – பூர்வீகமாக வாழ்ந்து வந்த தமிழ் மக்களுடைய பிரதேச செயலகர் பிரிவை அங்கீகரிக்க ஏன் உங்களால் முடியாதுள்ளது என்ற கேள்வியை பிரதமர் அவர்களுடைய பொதுநிர்வாக அமைச்சுக்களிடம் கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன்.

இன்று உலகத்துக்கு நல்லிணக்கத்தைப் பற்றி பேசுகின்ற நீங்கள் இதையாவது செய்யுங்கள். அரசியல் காரணங்களுக்காக – இந்த அநியாயங்கள் தமிழ் மக்களுக்கு தொடர்வதை அனுமதிக்க வேண்டாம். வேறு தரப்புகளுக்கு கிடைக்கக் கூடிய அங்கீகாரங்களை நாம் ஒருபோதும் தடுப்பவர்களல்லர். எங்களுக்குத் தேவைப் படும் விடயத்தையே நாங்கள் கேட்கின்றோம்.

அடுத்த விடயமாக, கடந்த ஒரு வாரமாக மாவீரர் வார நிகழ்வுகள் நடைபெற்றிருந்தன. மாவீரர் வாரத்தின் இறுதி நாளான நேற்றைய தினம், 27 ஆம் திகதி வடக்கு கிழக்கு முழுவதிலும் – தமிழ் மக்கள் தங்களது எதிர் காலத்துக்காக உயிர்த்தியாகம் செய்த உறவுகளை நினைவு கூர்ந்து வந்திருந்தனர். தாங்களாகவே தங்களது சொந்த செலவில் முயற்சிகளை மேற்கொண்டிருந்தனர். அப்படிப்பட்ட நிலையில் – சிறிலங்கா அரசின் இனவாத போக்கால் அனைத்து துயிலும் இல்லங்களிலும் நினைவேந்தல்களைத் தடைசெய்வதற்காக – பொலிஸார் நீதிமன்றங்களை நாடும் முயற்சிகள் நடைபெற்றிருந்தன. நீதிமன்றங்கள் தடைகளை வழங்கியிருந்தாலும், பின்னர் எங்களது நியாயங்களை பதிவு செய்து அந்தத் தடையை நீக்க நாங்கள் கோரியிருந்த நிலையில், வடக்கு, கிழக்கில் உள்ள நீதிமன்றங்கள் தடைசெய்யப்பட்ட அமைப்புக்களை நினைவுகூராமல் நினைவேந்தலை செய்யமுடியும் என்றே தீர்ப்புகளை வழங்கியிருந்தது.

கிழக்கு மாகாணத்தில் திருகோணமலை சம்பூரில் மட்டும்தான் தடை விதிக்கப்பட்டிருந்தது. அதனை மீள் பரிசீலனை செய்யுமாறு கோரியிருந்தும் கோரிக்கை நிராகரிக்கப்பட்டிருந்தது. அம்பாறையில் நினைவேந்தலை தடைசெய்யுமாறு கோரியிருந்த பொலிசாரின் கோரிக்கை நிராகரிக்கபட்டிருந்தது. மட்டக்களப்பில் தடைசெய்யப்பட்ட அமைப்பையோ அடையாளங்களையோ நினைவு கூரக்கூடாது என்றே தீர்ப்பு வழங்கப்பட்டிருந்தது. அப்படியிருக்க, கிழக்கு மாகாணத்தில் முழுமையாக தடை வழங்கப் பட்டிராத போதும் பொலிஸார் குறித்த நிகழ்வுகளை குழப்பும் வகையிலேயே செயற்பட்டிருந்தனர்.

பல இடங்களில் துயிலுமில்ல காணிகளில் இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டு படுமோசமாக அவமதிக்கின்ற செயற்பாடுகள் நடைபெற்றிருந்தன. அனைத்து துயிலுமில்லங்களிலும் இருந்த கல்லறைகள் அழிக்கப்பட்டிருக்கின்றன. தனியாரின் காணிகளில் தனியாருடைய அனுமதி பெற்று நினைவேந்தல் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்த போதும் கூட நினைவேந்தல்கள் செய்வதற்கு பொலிஸாரால் அனுமதி மறுக்கப்பட்டது. ஆகவே இவையெல்லாவற்றையும் கருத்தில் கொண்டு, இந்த அரசாங்கம் துயிலுமில்லங்கள் அமைந்திருந்த அரச காணிகள் அனைத்தையும் நினைவேந்தல் செய்வதற்குரிய காணிகளாக அங்கீகரித்து அதற்கென ஒதுக்கவேண்டும் என கேட்டுக்கொள்கின்றேன்.

அதேவேளை, நினைவேந்தல்கள் மூலம் மக்கள் தமது மரியாதைகளை செலுத்துவதற்குரிய வகையில் இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டுள்ள துயிலுமில்ல காணிகள் அனைத்தும் விடுவிக்கப்பட வேண்டும்.

தொடர்ச்சி ▼

# புத்தரே வெட்கித் தலைகுனியும் விதத்தில்தான் அரசின் செயற்பாடுகள் அமைந்திருக்கின்றன!

தொடர்ச்சி ▲

நினைவேந்தல் உரிமையை அங்கீகரிப்பது நல்லிணக்கத்துக்கு மிக முக்கியமான விடயமாகும். இவ்விடயம் நிலைமாறுகால நீதி பொறிமுறையின் ஐந்தாவது தூணுமாகும். நினைவுகூருகின்ற துயிலுமில்லங்களை அழிப்பதோ, அல்லது நினைவேந்தல்களைத் தடைசெய்வதோ மனித குலத்துக்கு எதிரான போர்க்குற்றமாகும்.

ஆகவே – இது தொடர்வதற்கு அனுமதிக்க முடியாது. போர் முடிவடைந்து 15 வருடங்கள் ஆகிவிட்டன. ஜே.வி.பிக்கு அவர்களுடைய ஆயுதப் போராட்டம் முடிவடைந்து ஒருசில வருடங்களுக்குள்ளேயே அவர்களை நினைவு கூர அனுமதிக்கப்பட்டுள்ளது. ஆனால், தங்களுக்காக உயிர் நீத்தவர்களை நினைவுகூர விடாமல் தமிழ் மக்களைத் தடுப்பது என்பது இனவாதத்தைத் தவிர வேறொன்றுமாக இருக்க முடியாது. ஜே.வி.பி. சிங்கள அமைப்பு என்பதற்காக அனுமதிக்கிறீர்கள். ஆனால் தமிழர்கள் என்ற வகையில் எமது நினைவேந்தல்களை திட்டமிட்டுத் தடுக்கிறீர்கள். இப்படிப்பட்ட பாரபட்சங்களை நீங்கள் நிறுத்தவேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

போர் முடிவடைந்த பின்னர் மிகச் சிறந்த நிலைக்கு செல்லவேண்டிய நாடு, இன்றைக்கு தலைகுப்புற விழுந்திருக்கிறதென்பது, உயிரிழந்த ஆத்மாக்களின் சாபங்களேயாகும். புத்த பெருமான கூட வெட்கித் தலைகுனியக்கூடிய அளவுக்குத் தான் உங்கள் செயற்பாடுகள் அமைந்திருக்கின்றன. இனவழிப்பை செய்தவர்களை காவலர்களாக சிங்கள மக்கள் கருதினார்கள். ஆனால் இன்று சிங்கள மக்களுக்கே துரோகம் அளித்தவர்கள் என்ற அடிப்படையில், அவர்கள் அந்த மக்களாலேயே துரத்தியடிக்கப்பட்டனர். இனியாவது விளங்கிக்கொண்டு, உங்களின் மிக மோசமான இனவாதப் பாதையை விட்டு திருத்திக்கொள்ளுங்கள் என்று கேட்டுக் கொள்கின்றேன்.– எனத் தெரிவித்துள்ளார்.



### பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைதான

# த.தே.ம. முன்னணி அமைப்பாளர் உட்பட மூவருக்கும் 13 வரையில் விளக்கமறியல்!

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு வவுணதீவு பொலிஸ் நிலையத்திற்கு முன்னால் மாவீரர்களுக்கு விளக்கு ஏற்றி நினைவேந்தலில் ஈடுபட்ட தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மாவட்ட அமைப்பாளர், அவரது மகன் மற்றும் மாவீரர் நினைவேந்தலுக்காக வாகனத்தில் கொடிகளை ஏற்றிச் சென்ற சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்ட 3 பேரையும் எதிர்வரும் 13 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு மட்டக்களப்பு நீதிவான் பீற்றர் போல் நேற்று புதன் கிழமை உத்தரவிட்டார்.

கடந்த 27 ஆம் திகதி தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக் கட்சியினர் தாண்டியடி மாவீரர் துயிலும் இல்லத்தை அலங்கரிக்க மட்டக்களப்பு நகரில் இருந்து பட்டா ரக வாகனத்தில் சிவப்பு, மஞ்சள் கொடிகள் மற்றும் கம்பிகள் உட்பட்ட பொருள்களை எடுத்துச் சென்ற நிலையில் பொலிஸார் வாகனத்தை மறித்து, சாரதியைக் கைது செய்து, பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்றனர்.

அதனைத் தொடர்ந்து கைது செய்யப்பட்ட சாரதியை பார்பதற்காக பொலிஸ் நிலையம் சென்ற தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் மாவட்ட அமைப்பாளர் குககுலராஜா (குகன்), அவரது மகன் ஆகியோர் அங்கு பொலிஸ் நிலையத்துக்கு முன்னால் வீதியில் மாவீரர்களுக்காக விளக்கேற்றி நினைவேந்தலில் ஈடுபட்டமையை அடுத்து அவர்கள் இருவரையும் கைது செய்தனர்.

இந்த நிலையில் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட 3 பேரையயும் 72 மணித்தியாலயம் பொலிஸ் தடுப்பு காவலில் வைத்து விசாரணை செய்ய நீதிமன்ற அனுமதியை பெற்று தடுத்துவைத்தனர்.

இந்த நிலையில் தடுத்து வைக்கப் பட்டிருந்த 3 பேரும் நேற்றுப் புதன் கிழமை மட்டக்களப்பு நீதிவான் பீற்றர் போல் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டபோது அவர்களை எதிர்வரும் 13ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

# கல்வியங்காட்டில் இயங்கிய உணவகத்துக்கு சீல் வைப்பு!

யாழ் மாநகரசபையின் நல்லூர் பிரிவு பொது சுகாதார பரிசோதகர் பு.ஆறுமுகதாசன் தலைமையிலான குழுவினரால் கல்வியங்காட்டு பகுதியில் அமைந்துள்ள உணவகம் நேற்றுத் திடீர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டது.

இதன்போது பல சுகாதார சீர்கேடுகள், குறைபாடுகள் இனங் காணப்பட்டன எனக் கூறப்பட்டது. ஏற்கனவே பல தடவைகள் அறிவுறுத்தப்பட்ட நிலையிலும் தொடர்ந்து சுகாதார சீர்கேட்டுடனேயே இந்த உணவகம் இயங்கி வந்தமை அவதானிக்கப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது. அத்துடன் உணவகத்தில் திகதி காலாவதியான உணவு பொருள்களும் பொது சுகாதார பரிசோதகர்களால் கைப்பற்றப்பட்டன.

இதனையடுத்து உணவக உரிமையாளருக்கு எதிராக நீதிமன்றில் நேற்றுப் புதன்கிழமை பொது சுகாதார பரிசோதகர் பு. ஆறுமுகதாசனினால் சுகாதார சீர்கேடு, காலாவதியான உணவு பொருள்கள் வைத்திருந்தமை என்பவற்றிற்கு தனித்தனியே வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன.

வழக்கை விசாரித்த நீதிவான் குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்படும் வரை உணவகத்தை சீல் வைத்து மூடுமாறு பொது சுகாதார பரிசோதகருக்குக் கட்டளை வழங்கினார். இதனையடுத்து பொது சுகாதார பரிசோதகர் பு. ஆறுமுகதாசனினால் உணவகம் சீல் வைத்து மூடப்பட்டது.






# குற்றச் செயல்களுடன் தொடர்புடைய இளைஞன் புதுக்குடியிருப்பில் கைது

**(சண்முகம் தவசீலன்)**

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்புப் பிரதேசத்துக்கு உட்பட்ட பல்வேறு பகுதிகளில் கொள்ளை மற்றும் திருட்டுச் சம்பவங்களில் ஈடுபட்டு வந்தவர் எனக் கருதப்படும் இளைஞனை புதுக்குடியிருப்புப் பொலிஸார் நேற்று முன்தினம் கைது செய்துள்ளார்கள்.

கைவேலிப் பகுதியைச் சேர்ந்த 29 வயதுடைய இந்த இளைஞன் போதைக்கு அடிமையானவர் என விசாரணைகளில் தெரிய வந்துள்ளது. இவரால் களவாடப்பட்ட 16 காஸ் சிலிண்டர்கள், ஒரு தண்ணீர் மோட்டார், ஒரு சைக்கிள், வயர் ரோல்கள், கதிரைகள், தங்கசங்கிலி உள்ளிட்ட பெருமளவான பொருள்களைப் பொலிஸார் மீட்டுள்ளார்கள்.

புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் தனிமையில் வசிக்கும் வயோதிபர்களின் வீடுகளுக்கு செல்லும் இந்த இளைஞன் அங்கு காணப்படும் காஸ் சிலிண்டர்களை களவாடுகின்றமையுடன் தங்க நகைகளை கொள்ளையடித்துச் சென்ற சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன.

இவற்றை விற்றுப் போதைப் பொருள்களுக்கு பயன்படுத்தி வருகிறார் என விசாரணைகள் தெரிய வந்துள்ளது.

காஸ் சிலிண்டர்கள் களவாடப்பட்டுள்ள சம்பவத்துடன் தொடர்புடைய மேலும் மூவரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சந்தேக நபர்களை சான்று பொருள்களுடன் முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தும் நடவடிக்கையில் புதுக்குடியிருப்புப் பொலிஸார் ஈடுபட்டுள்ளார்கள்.



# புலிகளின் சின்னம் பொறித்த ஆடையுடன் கைதான இளைஞருக்கு விளக்கமறியல்!

(எஸ்.நிதர்ஷன்)

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் சின்னம் மற்றும் விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவரின் படங்கள் பொறித்த ஆடை அணிந்து மாவீரர் நாள் நினைவேந்தலில் பங்கேற்ற இளைஞரை டிசம்பர் 12 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டது.

நாட்டில் தடைசெய்யப்பட்ட விடுதலைப் புலிகள் அமைப்பின் சின்னம் மற்றும் விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவரின் படங்கள் பொறித்த ஆடை அணிந்து மாவீரர் நாள் நினைவேந்தலில் பங்கேற்றார் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் கொடிகாமம், ஐயனார் கோவில் பகுதியைச் சேர்ந்த 27 வயதான இளைஞர் நேற்று முன்தினம் கொடிகாமம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்று சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழும் பயங்கரவாதத் தடுப்பு விதிகளின் கீழும் அந்த இளைஞர் மீது பொலிஸாரால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இதன்போது சந்தேகநபர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி கேசவன் சயந்தன், "சந்தேகநபர் குற்ற மனப்பான்மையுடன் அந்தச் செயலைச் செய்யவில்லை. விநோதமான முறையில் இதனைச் செய்துள்ளார். இது தேசிய பாதுகாப்புக்குச் சவால் விடும் வகையில் செய்யவில்லை. குற்ற மனப்பான்மையுடன் செய்யாத குறித்த செயலுக்குப் பயங்கரவாதத் தடைச் சட்டம் போன்ற கடுமையான சட்டத்தின் கீழ் வழக்குத் தாக்கல் செய்வது நீதிவானுக்கே பிணை வழங்க முடியாது போகலாம். பொலிஸார் விசாரணைகளை மேற்கொள்ள அவகாசம் தேவையெனில் பொலிஸ் தடுப்புக் காவலில் வைத்து விசாரணை செய்து குறித்த செயலில் தீய எண்ணம் இல்லை என்ற உண்மையை அறியலாம்." – என்றார்.

சந்தேகநபரிடம் விசாரணை மேற்கொள்ள பொலிஸார் மேலும் கால அவகாசம் கோரிய நிலையில் சம்பவம் தொடர்பில் விரைவில் பூரண விசாரணைகளை மேற்கொண்டு முழுமையான விசாரணை அறிக்கையை வழக்கின் அடுத்த தவணையின்போது சமர்ப்பிக்குமாறு பொலிஸாருக்கு நீதிவான் உத்தரவிட்டார்.

வழக்கை விசாரித்த சாவகச்சேரி நீதிவான் அந்தோனிப்பிள்ளை யூட்சன் சந்தேகநபரை எதிர்வரும் டிசம்பர் 12ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.



# புலிகளைப் போல ஆடையணிந்த சிறுவர்கள் குறித்தும் விசாரணை!

மாவீரர் தின நிகழ்வில் விடுதலைப்புலிகளின் போராளிகளின் ஆடைகளை ஒத்த ஆடைகளை சில சிறுவர்கள் அணிந்து வந்தனர் எனும் குற்றச்சாட்டில், கோப்பாய் பொலிஸார் ஆறு பேரிடம் வாக்கு மூலங்களை பெற்றுள்ளனர்.

கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்திற்கு முன்பாக கடந்த திங்கட்கிழமை நடைபெற மாவீரர் நாள் நிகழ்வின் போது, விடுதலைப்புலிகளின் போராளிகள் போன்ற ஆடைகளை சில சிறுவர்கள் அணிந்து இருந்தனர் என சில படங்கள் சமூக வலைத்தளங்களில் பகிரப்பட்டு வந்தன.

அவை தொடர்பில் கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்த நிலையில், படங்களில் இனம் காணப்பட்ட சிறுவர்களின் பெற்றோரை பொலிஸ் நிலையத்திற்கு அழைத்து அவர்களின் வாக்கு மூலங்களை பெற்றுள்ளனர்.

வாக்கு மூலங்களின் அடிப்படையில் மேலதிக விசாரணைகளை தாம் முன்னெடுக்க உள்ளனர் எனவும், இது தொடர்பில் எவரையும் இது வரையில் தாம் கைது செய்யவில்லை எனவும் கோப்பாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.



# அமெ. இராணுவத்தின் ஹைபிரிட் விமானம் எட்டுப் பேருடன் ஜப்பான் கடலில் வீழ்ந்தது

## ஒருவர் மட்டுமே மீட்கப்பட்டார் எனத் தகவல்

டோக்கியோ, நவ. 30

அமெரிக்க இராணுவத்தின் ஆஸ்பிரே விமானம், எட்டுப் பேருடன் சென்று கொண்டிருந்த போது ஜப்பானின் தென்பகுதியில் யாகுஷிமா தீவு அருகே கடலில் விழுந்து விபத்துக்குள்ளானது. விபத்து நடந்த பகுதிக்கு அருகில் மீன்பிடித்துக்கொண்டிருந்த மீனவர்கள், ஜப்பான் கடலோர காவல் படைக்கு தகவல் தெரிவித்தனர். இதையடுத்து கடலோர காவல் படையினர் சம்பவ இடத்தில் தேடும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

ஹெலிக்கொப்டர் மற்றும் ரோந்துப் படகுகள் மூலம், அப்பகுதியில் தேடியபோது ஒருவர் மட்டும் மீட்கப்பட்டுள்ளார். விமானத்தின் உடைந்த பாகங்களும் கண்டறியப்பட்டன. அவை விபத்துக்குள்ளான விமானத்தின் பாகங்களாக இருக்கலாம் என நம்பப்படுகிறது. மீட்கப்பட்டவரின் நிலை, மற்றவர்கள் என்ன ஆனார்கள் என்பது குறித்த தகவல் வெளியாகவில்லை.

இதுபற்றி ஜப்பான் கடலோர காவல் படை செய்தித் தொடர்பாளர் கூறுகையில், "யமகுச்சி மாகாணத்தில் உள்ள அமெரிக்க மரைன் கார்ப்ஸ் விமான நிலையமான இவாகுனி நிலையத்தில் இருந்து புறப்பட்ட விமானம், ஒகினாவாவில் உள்ள கடேனா விமான தளம் நோக்கி சென்றபோது விபத்துக்குள்ளானது. கடலில் விழுவதற்கு முன்பாக, யாகுஷிமா விமான நிலையத்தில் அவசரமாக தரையிறக்கவும் முயற்சி செய்யப்பட்டது" என்றார்.

ஆஸ்ப்ரே விமானம், ஹெலிக்கொப்டர் போன்று புறப்பட்டு தரையிறங்கக் கூடிய ஹைபிரிட் விமானம் ஆகும். இந்த வகை விமானங்கள் அமெரிக்க ஆயுதப்படைகளின் ஒரு பிரிவான மரைன் கார்ப்ஸ், கடற்படை மற்றும் விமானப் படையில் பயன்படுத்தப்படுகின்றன.



# போப் ஆண்டவருக்கு உடல்நலக்குறைவு அவரின் துபாய்ப் பயணம் அதனால் ரத்து!

வத்திக்கான், நவ. 30

போப் ஆண்டவர் உடல்நலக்குறைவால் பாதிக்கப்பட்டிருக்கின்றமையால் துபாயில் நடைபெறும் ஐ.நா. அவையின் உலக காலநிலை மாநாட்டில் அவர் கலந்து கொள்ள மாட்டார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

டிசம்பரில் 87 வயதை நிறைவுசெய்ய உள்ள போப் பிரான்சிஸ்/க்கு, இளம் வயதிலேயே அவருடைய நுரையீரலின் ஒரு பகுதி அகற்றப்பட்டது. இந்தநிலையில், கடந்த ஒருவாரமாக அவர் நுரையீரல் வீக்கம் மற்றும் காய்ச்சலால் கடுமையாக பாதிக்கப்பட்டிருக்கின்றார் என வத்திகான் அரண்மனை நிர்வாகம் தெரிவித்துள்ளது.

இதனைத் தொடர்ந்து, போப் பிரான்சிஸின் உடல் நிலையைக் கருத்தில்கொண்டு அவர் கட்டாயம் ஓய்வெடுக்க வேண்டுமென மருத்துவர்கள் அறிவுறுத்தியுள்ளனர். இந்த நிலையில் மருத்துவர்கள் பரிந்துரையை ஏற்று, போப் ஆண்டவரின் துபாய் பயணம் ரத்து செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நியூயோர்க்கில் குடும்பத்தவர் மூவரை சுட்டுக் கொன்ற இந்திய இளைஞன்!

நியூயோர்க்,நவ.30

அமெரிக்காவின் நியூ ஜெர்சி மாநிலம், சவுத் ப்ளைன்பீல்டு பகுதியில் உள்ள அடுக்குமாடி குடியிருப்பில் இந்திய இளைஞர் ஒருவர் குடும்பத்தவர் மூவரைச் சுட்டுக் கொன்றிருக்கின்றார்.

அந்த அடுக்குமாடிக் குடியிருப்பில் இந்தியாவைச் சேர்ந்த யஷ்குமார் பிரம்மபட்(வயது 38), அவரது பெற்றோர் திலீப்குமார் பிரம்மபட் (வயது 72), பிந்து பிரம்மபட் (வயது 72) ஆகியோர் வசித்து வந்தனர். கடந்த சில மாதங்களுக்கு முன்பு யஷ்குமாரின் சகோதரர் மகன் ஓம் பிரம்மபட் (வயது 23) நியூ ஜெர்சி வந்து இவர்களுடன் தங்கிப் படித்து வந்தான்.

இந்நிலையில் கடந்த திங்கட்கிழமை காலை 9 மணியளவில் அவர்களின் வீட்டில் துப்பாக்கி சுடும் சத்தம் கேட்டதாக அருகில் வசிப்பவர் பொலிஸாருக்குத் தகவல் தெரிவித்தார்.

சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த பொலிஸார், வீட்டின் இரண்டாவது மாடியில் திலிப் மற்றும் பிந்து இறந்து கிடப்பதை கண்டனர். பின்னர் யஷ்குமார் உடலில் பல்வேறு இடங்களில் துப்பாக்கி தோட்டாக்கள் பாய்ந்த நிலையில் அவரை மீட்டு மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். ஆனால் சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்தார்.

கடும் அதிர்ச்சியை ஏற்படுத்திய இந்த கொலை தொடர்பாக, அந்த வீட்டில் இருந்த ஓம் பிரம்மபட்டை பொலிஸார் விசாரித்தனர். அப்போது, கைத்துப்பாக்கி மூலம் அவர்களைத் தாம் சுட்டார் எனவும், அந்தத் துப்பாக்கியை ஒன்லைனில் தாம் வாங்கினார் எனவும் கூறியிருக்கிறார். பின்னர் அவரை பொலிஸார் கைது செய்தனர். அவர் மீது, கொலை மற்றும் சட்டவிரோதமாக ஆயுதம் வைத்திருந்தது உள்ளிட்ட பிரிவுகளில் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

துப்பாக்கிச்சூட்டுக்கு என்ன காரணம் என்பது குறித்த தகவல் வெளியாகவில்லை. தொடர்ந்து விசாரணை நடந்து வருகிறது என்று பொலிஸ் அதிகாரி தெரிவித்தார்.

# விமானத்தில் கணவன் – மனைவி நடுவானில் கட்டிப் புரண்டு சண்டை

## அவசர அவசரமாக டெல்லியில் தரையிறக்கம்



புதுடெல்லி, நவ. 30

ஜேர்மனியில் இருந்து பாங்கொக்குக்கு சென்ற விமானம் ஒன்றில் கணவன் – மனைவி இருவரும் கட்டிப்புரண்டு சண்டையிட்டதால் அந்த விமானம் அவசர அவசரமாக டெல்லியில் தரையிறக்கப்பட்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

பயணிக்கு திடீர் மாரடைப்பு, விமானத்தில் இயந்திரக் கோளாறு, தீவிரவாத அச்சுறுத்தல் போன்ற ஆபத்தான காரணங்களுக்காவே விமானம் இது போன்று அவசரமாக தரையிறக்கப்படும். ஆனால், அந்த கணவன் – மனைவி சண்டை எவ்வளவு பயங்கரமானதாக இருந்திருந்தால் விமானி இப்படி ஒரு முடிவை எடுத்திருப்பார் என யோசிக்க வைக்கிறது.

அண்மைக்காலமாக விமானங்களில் நடைபெறும் சம்பவங்களை பார்க்கும்போது, விமானப் பயணத்தையே தவிர்த்துவிடலாம் என யோசிக்க வைத்து விடுகிறது. வயிறு முட்ட மது அருந்திவிட்டு அருகில் இருக்கும் சக பெண் பயணி மீது சிறுநீர் கழித்த தொழிலதிபர், விமானத்தின் அவசரக் கதவை பாத்ரூம் என நினைத்து திறந்த இளைஞர், விமானி அறைக்குள் அத்துமீறி நுழைந்த போதை ஆசாமி என திகிலூட்டும் சம்பவங்கள் தொடர்ச்சியாக நடைபெறுகின்றன.

இந்நிலையில், ஜேர்மனியின் முனிச் நகரில் இருந்து தாய்லாந்தின் பாங்கொக் நகருக்கு லுப்தான்சா நிறுவன விமானம் சென்று கொண்டிருந்தது. 300-க்கும் மேற்பட்ட பயணிகள் அந்த விமானத்தில் இருந்தனர். இந்தச்சூழலில், விமானத்தில் இருந்த கணவன் – மனைவிக்கு இடையே திடீரென வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது. பிறகு வாக்குவாதம் முற்றிய நிலையில், அது கைகலப்பாக மாறியது.

விமானத்தில் இருவரும் ஒருவரையொருவர் கடுமையாக தாக்கிக் கட்டிப்புரண்டு சண்டையிட்டனர். ஒரு கட்டத்தில், கையில் கிடைக்கும் பொருள்களை எடுத்து ஒருவர் மீது ஒருவர் வீசினர். இதனால் மற்ற பயணிகளுக்கும் லேசான காயம் ஏற்பட்டது. அது மட்டுமல்லாமல், இவர்களின் சண்டையால் விமான ஜன்னல்களில் ஏதேனும் விரிசல் விழுந்துவிட்டால் விமானமே விபத்துக்குள்ளாகிவிடுமே என அனைவருக்கும் பயம் வந்துவிட்டது. இதையடுத்து, விமானக் குழுவினர் விமானியிடம் விமானத்தை அவசரமாக தரையிறக்குமாறு தெரிவித்தனர்.

அப்போது, இந்தியா – பாகிஸ்தான் எல்லையில் விமானம் பறந்து கொண்டிருந்ததால், பாகிஸ்தானில் உள்ள ஒரு விமான நிலையத்தில் தரையிறங்குவதற்காக விமானி அனுமதி கேட்டார். ஆனால், பாகிஸ்தான் அனுமதி மறுத்துவிட்டது. இதனைத் தொடர்ந்து, டெல்லி சர்வதேச விமான நிலையத்தின் அனுமதியை பெற்ற பிறகு அந்த விமான நிலையத்தில் ஜேர்மனி விமானம் தரையிறக்கப்பட்டது.

இதையடுத்து, அந்தக் கணவன் மனைவியை அங்கிருந்த பொலிஸாரிடம் விமானக் குழுவினர் ஒப்படைத்தனர். ஒரு சாதாரண கணவன் – மனைவி சண்டையால் விமானமே அவசரமாக தரையிறக்கப்பட்ட சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இதுகுறித்து டெல்லி இந்திரா காந்தி சர்வதேச விமான நிலையத்தின் பாதுகாப்பு அதிகாரி ஒருவர் செய்தியாளர்களிடம் கூறுகையில் –

கணவன், மனைவியின் சண்டைக்கான காரணம் தெரியவில்லை. ஆனால், அவர்கள் சண்டையிட்டதால் அவசரமாக விமானம் தரையிறக்கப்பட்டது. – என்று தெரிவித்தார்.

# மோ.சைக்கிளில் அபாயகர ஓட்டம் அச்சுறுத்தும் வகையில் ஹெல்மெட்

## பொலிஸ் மடக்கி நடவடிக்கை




தென்காசி,நவ.30

தென்காசியை அடுத்த குற்றாலம் பஸ் நிலையம் அருகே மோட்டார் சைக்கிளில் அபாயகரமான முறையில் வாலிபர் ஒருவர் சென்று வந்துள்ளார். மேலும் அந்த நபர் பொதுமக்களை அச்சுறுத்தும் வகையில் ஹெல்மெட் அணிந்தபடி சுற்றித்திரிந்து உள்ளார்.

இதுதொடர்பான வீடியோ சமூக வலைதளங்களில் வைரலாக பரவி வந்த நிலையில், மேற்கொண்டு அசம்பாவித சம்பவங்கள் நடைபெறுவதற்கு முன்பு அந்த வாலிபரை பொலிஸார் பிடித்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் பொதுமக்கள் தெரிவித்து வந்தனர்.

இந்நிலையில் பொலிஸ் சூப்பிரண்டு சுரேஷ்குமார் உத்தரவின் பேரில் குற்றாலம் பொலிஸார் அப்பகுதியில் உள்ள சி.சி.டி.வி. கேமராக்களை சோதனை செய்து அந்த நபரை தேடி வந்த நிலையில், தென்காசி மலையான் தெருவை சேர்ந்த சுரேஷ் என்பவரின் மகன் சுஜித் (வயது 23) என தெரிய வந்தது.

இதுகுறித்து சுஜித் மீது மோட்டார் வாகன சட்டத்தின் கீழ் பொலிஸார் வழக்குப்பதிவு செய்து ரூ.10 ஆயிரம் அபராதம் விதித்தனர். மேலும் மோட்டார் சைக்கிளையும் பறிமுதல் செய்தனர்.

# புதுடில்லியில் ஈழத் தமிழர் ஆதரவுக் கூட்டம்

பல்வேறு கண்டங்களையும் சேர்ந்த புலம்பெயர் தமிழ் அமைப்புகளின் தலைவர்கள் மற்றும் இலங்கையின் தமிழ்ப் பிரதிநிதிகள் நேற்று முதல் டிசம்பர் 2ஆம் திகதி வரை புதுடில்லியில் கூடி இலங்கைத் தமிழர் விவகாரம் குறித்து கூடி ஆராய்கின்றனர். நேற்றைய கூட்டத்தின்போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

இலங்கையில் வாழும் தமிழ் சமூகத்தின் பரிதாபகரமான நிலைமைகளை முன்னிலைப்படுத்தி, கொள்கை உருவாக்கம் மற்றும் பிரசார நடவடிக்கையில் இப்பிரதிநிதிகள் ஈடுபடுவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.















# சட்டவிரோதமாகக் கடலட்டைகள் பிடித்த 12 பேர் சிலாவத்துறை கடற்பரப்பில் கைது

(மன்னார் நிருபர்)

சிலாவத்துறை- கொண்டச்சிக்குடா கடல் பகுதியில் நேற்று புதன்கிழமை அதிகாலை கடற்படையினர் மேற்கொண்ட விசேட நடவடிக்கையின் போது சட்டவிரோதமாகக் கடலட்டைகள் பிடிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்ட 12 பேரை கடற்படையினர் கைது செய்துள்ளனர்.


இந்த நடவடிக்கைகளின் போது 04 டிங்கி படகுகள், சுமார் 1670 கடலட்டைகள் மற்றும் உபகரணங்கள் கைப்பற்றப்பட்டன.

மீன் வளத்தின் நிலைத்தன்மையை அச்சுறுத்தும் சட்டவிரோத மீன்பிடி நடைமுறைகளைத் தடுக்கும் நோக்கில் கடற்படையினர் தீவைச் சுற்றியுள்ள கரையோர மற்றும் கடல் பகுதிகளில் கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

அதன் படி வடமேற்கு கடற்படையினர் கொண்டச்சிக்குடா பகுதியில் இந்த தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்ட போது இந்நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

இந்நடவடிக்கையின் போது கைது செய்யப்பட்டவர்கள் கல்பிட்டி, சிலாவத்துறை, வங்காலை மற்றும் மன்னார் ஆகிய பகுதிகளில் வசிப்பவர்கள் எனவும் 23 முதல் 48 வயதுக்கு உட்பட்டவர்கள் எனவும் கடற்படை தெரிவித்துள்ளது.

கைது செய்யப்பட்ட 12 பேரும் கைப்பற்றப்பட்ட கடலட்டைகள் மற்றும் பொருட்களுடன் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக சிலாவத்துறை கடற்றொழில் பரிசோதகரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர் எனக் கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.



# உரும்பிராய் காளி கோவிலில் ஐம்பொன் அம்மன் சிலை மாயம்

## செவ்வாய் இரவு திருடர்கள் கைவரிசை

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உரும்பிராய் காளி கோயிலில் நேற்று முன்தினம் இரவு திருட்டுச் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இந்த ஆலயக் கர்ப்பக்கிரகத்தினுள் இருந்த – சுமார் 4 லட்சம் ரூபா பெறுமதியான – ஐம்பொன்னிலான – அம்மன் சிலை மற்றும் அம்மன் தாலி, அம்மனின் தோடு உள்ளிட்ட ஒன்றரைப் பவுண் நகை என்பன திருடப்பட்டுள்ளமையோடு ஆலய வளாகத்தில் இருந்த உண்டியல் உடைக்கப்பட்டு ஒரு தொகை பணமும் திருடர்களால் அபகரித்துச் செல்லப்பட்டுள்ளது.

இந்தத் திருட்டுச் சம்பவம் தொடர்பில் ஆலயப் பூசகரால் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

நேற்றுக் காலை 7 மணி அளவில் ஆலயப் பூசகர் ஆலயத்திற்கு சென்று பூசை வழிபாடுகளை மேற்கொள்ள முற்பட்ட போதே திருட்டு இடம்பெற்றுள்ளமை தெரிய வந்ததாக ஆலயப் பூசகர் பொலிஸாரிடம் வாய்முறைப்பாடு வழங்கியுள்ளார்.

# இன்றைய ராசி பலன்கள் - 30.11.2023


மேஷம்

உங்கள் ஆற்றலை நீங்கள் உணரும் நாள். இன்று இலக்குகளை நிர்ணயித்து முயன்றால் வெற்றி காண்பீர்கள்.

பணியிடத்தில் சவால்கள் நிறைந்து காணப்படும். சிறிது கவனமுடன் நம்பிக் கையாக உங்கள் பணிகளை மேற்கொள்ளுங் கள்.

உங்கள் துணையுடன் வெளியிடங்களுக்கு செல் வதன் மூலம் உறவில் நல்லிணக்கம் ஏற்படுத்த இயலும்.

தேவையான சமயத்தில் உங்களுக்கு பண உதவி கிடைக்கும். பங்கு வர்த்தகத்தின் மூலம் பணம் கிடைக் கும்.

கண்களில் எரிச்சல் ஏற்படலாம். இதனால் சில பாதிப்புகள் உண்டாகலாம்.


ரிஷபம்

இன்றைய நாளை பொறுமையுடன் கையாள வேண்டும். பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளில் ஈடுபடுவதன் மூலம் மன திற்கு நன்மை கிடைக்கும்.

பணிகளை மேற்கொள்ளும் போது சிறிது போராட வேண்டியிருக்கும். பணிச் சுமை அதிகமாக காணப்படும். பணியில் தவறுகள் நேராத வகையில் திட்டமிட்டு பணியாற்றுங்கள்.

உங்கள் துணையுடன் மோதல் ஏற்பட வாய்ப்புள்ளது. நீங்கள் உரையாடும் போது கவனம் தேவை.

செலவுகள் அதிகமாக காணப்படும். ஆனால் பணம் குறைவாக இருக்கும். ஸ்திரத்தன்மைக்கான வாய்ப்பு குறைவு.

உங்கள் தாயின் உடல் நலத்திற்காக பணத்தை செலவு செய்வீர்கள். இது உங்களுக்கு வருத்தத்தை உண்டாக் கும்.


மிதுனம்

இன்று போராட்டங்கள் நிறைந் திருக்கும். பொறுமை மிக அவசியம். பொழுது போக்கு நிகழ்ச்சிகளில் ஈடுபடுவது மகிழ்ச்சியை அளிக்கும்.

இன்று பணியில் மும்மரமாக இருப் பீர்கள். அதிக அளவு முயற்சி எடுத்து பணிகளை ஆற்ற வேண்டியிருக்கும்.

உங்கள் துணையுடன் அதிருப்தியான மனநிலை காணப்படும். உங்கள் துணையுடன் கள்ளங்கபடமின்றி பழக வேண்டும்.

இன்று பணத்தட்டுப்பாடு காணப்படும். செலவினங் கள் அதிகரித்து காணப்படுவதால் பணத்தை செலவு செய்ய நேரும்.

இன்று ஆரோக்கிய பாதிப்புகளை எதிர்கொள்வீர்கள் கால் வலி ஏற்படலாம். நீங்கள் உங்களை ஆரோக்கிய மாக வைத்திருக்கலாம்.


கடகம்

வீட்டில் நடத்தவிருக்கும் விஷே சங்களை தள்ளிப் போடுதல் நல்லது. விழிப்புணர்வுடன் இருப்பதன் மூலம் நிலைமையை சீராக பராமரிக்கலாம்.

இன்று பணியில் அனுகூலமான சூழ்நிலை காணப்படும். கடினமான பணிகளையும் எளிதாக முடிப்பீர்கள். பணிகளை விரைந்தும் முடிப்பீர்கள்.

உணர்ச்சிவசப்படாதீர்கள். உங்கள் துணையிடம் நட்பான அணுகுமுறை மேற்கொள்ளுங்கள்.

இன்று பயணத்தின் பொழுது பண இழப்பிற்கான வாய்ப்பு உள்ளது.

இன்று தோல் சம்பந்தமான பிரச்சினை உங்களை பாதிக்கும். எண்ணெய் உணவு வகைகளை உட்கொள் வதை தவிர்க்கவும்.


சிம்மம்


இன்று அனுகூலமான நாளாக இருக்கும். சிறிய அளவு முயற்சியில் உங்கள் பணிகளை முடிப்பீர்கள். புதிய முதலீடுகள் இன்று லாபகரமாக இருக்கும். உங்கள் தன்னம்பிக்கை அதிகரிக்கும்.

பணியில் உங்கள் திறமை பாராட்டப்படும். உங்க ளுக்கு கொடுக்கப்பட்ட பணிகளை விரும்பி ஆற்றுவீர் கள்.

உங்களுக்கும் உங்கள் துணைக்கும் இடையேயான புரிந்துணர்வு காரணமாக உங்கள் துணையிடம் மகிழ்ச்சியை பகிர்ந்துகொள்வீர்கள்.

உங்களிடம் அதிக அளவு பணம் காணப்படும். குடும்ப வளர்ச்சிக்காக பணத்தை செலவு செய்வீர்கள்.

இன்று சிறப்பான ஆரோக்கியம் காணப்படும். இன்று சிறந்த ஆற்றலுடன் காணப்படுவீர்கள்.


கன்னி

இன்று பொதுவாக மகிழ்ச்சி காணப் படும். புதிய தொடர்புகள் ஏற்படுத்திக் கொள்ள இன்றைய நாளை பயன்படுத் திக் கொள்ளுங்கள்.வெளியிடங்கள் மற்றும் விருந்துகளுக்கு செல்வது உங்களுக்கு மகிழ்ச்சியைத் தரும்.

இன்று பணிகளை திறமையுடன் கையாளும் பொறுமை உங்களிடம் காணப்படாது.இதனால் தவறுகள் நேர வாய்ப்புள்ளது. சூழ்நிலையைக் கையாள அறிவு பூர்வமாக செயல்பட வேண்டும்.

உங்கள் துணையிடம் மனம் திறந்து உங்கள் கருத் துக்களை பரிமாறிக்கொள்ளுங்கள். இதனால் நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

இன்று பணத்தை சிறப்பாக பராமரிப்பீர்கள். பங்கு வர்த்தகத்தில் பணம் சம்பாதிக்க முயற்சிகள் செய்ய லாம்.


துலாம்

இன்று கவனமாக இருக்க வேண்டும். சூடான விவாதங்களுக்கு வாய்ப் புள்ள தால் அக்கம் பக்கத்தினருடன் கவன மாக பழக வேண்டியது முக்கியம். உரையாடுவதற்கு முன் கவனம் தேவை.

இன்று பணியில் திருப்திகரமான நிலை இருக்காது. பணிச்சுமையை சமாளிக்க வேண்டியிருக்கும். உங்கள் சக பணியாளர்களிடமிருந்து ஒத்துழைப்பு கிடைக்காது.

குடும்பப் பிரச்சினை காரணமாக உங்கள் துணை யுடன் கருத்து வேறுபாடு காணப்படும். இன்று மகிழ்ச்சி குறைந்து காணப்படும்.

இன்று தேவையற்ற செலவுகள் காணப்படும்.அவற்றை தவிர்த்தல் நல்லது.

அதிக யோசனை ஆரோக்கிய பாதிப்பை ஏற்படுத்தும். தியானப் பயிற்சி மேற்கொள்வது ஆரோக்கியத்திற்கு நல்லது.


விருச்சிகம்

இன்று பலன்கள் கலந்து காணப்படும். பொறுமையாக இருக்க வேண்டும். சமயோசிதமாக செயல்பட வேண் டும்.

உங்கள் கடின உழைப்பு நற்பலன் களைத் தரும். உங்கள் சிறந்த அணுகுமுறை மூலம் பணியில் நிறைய சாதிப்பீர் கள்.

உங்கள் மனதில் காணப்படும் குழப்பம் காரண மாக உங்கள் துணையுடனான உறவில் புரிந்துணர்வு குறைந்து காணப்படும்.

பணப்புழக்கம் சிறப்பாக காணப்படாது. அதிக பணம் சம்பாதிப்பது கடினமாக இருக்கும்.

பதட்டம் மற்றும் அமைதியின்மை காரணமாக தொடை மற்றும் கால் வலியால் பாதிக்கப்படலாம்.

# இன்றைய ராசி பலன்கள் - 30.11.2023

## தனுசு

இன்றைய நாள் சாதகமான நாளாக இருக்கும். புதிய மனிதர்கள் மற்றும் நபர்களின் தொடர்புகள் ஏற்படும். அதன் மூலம் புதிய அனுபவம் ஏற்படும்.

நீங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிப்பீர்கள். நீங்கள் ஆற்றிய பணிக்காக உங்கள் மேலதிகாரிகளின் அங்கீகாரத்தை பெறும் வாய்ப்பு உள்ளது.

உங்கள் இருவர்க்கும் இடையே நல்ல புரிந்துணர்வு காணப்படும். இது உங்கள் துணையுடன் நல்ல உறவை பராமரிக்க உதவும்.

இன்று உங்களிடம் அதிக பணம் காணப்படும். வெளியிடங்களுக்கு செல்லுதல் போன்ற திட்டமிடாத விஷயங்களுக்கு பணத்தை செலவு செய்வீர்கள்.

இன்று பெரிய அளவிலான ஆரோக்கிய பிரச்சினைகள் காணப்படாது.

## மகரம்

இன்றைய நாள் சுமுகமாக இருக்கும். இன்று உங்கள் பணிகளை முடிக்க முடியும். இன்று உங்களின் வளர்ச்சி உறுதி. நீங்கள் அமைதியுடன் முக்கியமான முடிவுகளை எடுப்பீர்கள்.

இன்று பனிச் சுமை அதிகமாக காணப்படும். சக பணியாளர்களிடம் கவனமாகப் பழகுங்கள்.

இன்று உங்கள் மனதில் நம்பிக்கையான எண்ணங்கள் காணப்படும். அதனை உங்கள் துணையுடன் பகிர்ந்து கொள்வீர்கள். சிறப்பான தருணங்களை பகிர்ந்துகொள்வீர்கள்.

இன்று பணப்புழக்கம் சீராக இருக்கும். நிதி வளர்ச்சி மேம்படுத்துவதில் உங்களுக்கு இருக்கும் திறனை நீங்கள் உணர்வீர்கள்.

## கும்பம்

இன்றைய நாள் சீராக இருக்கும். நீங்கள் அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும். உங்கள் தன்னம்பிக்கையை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

உங்கள் பணியில் திருப்தி காண முடியாது. தவறுகள் நேர வாய்ப்புள்ளது. எனவே மிகவும் கவனமாக இருக்க வேண்டியது அவசியம்.

உங்கள் துணையிடம் பொறுமை இழப்பீர்கள். உங்கள் துணையிடம் கனிவாக நடந்துகொள்ளுங்கள்.

இன்று நிதி வளர்ச்சி சுமாராக காணப்படும். இன்று பணத்தை சமாளிப்பதை கடினமாக உணர்வீர்கள்.

இன்று ஆரோக்கியம் சுமாராக இருக்கும். ஒவ்வாமை காரணமாக இருமல் ஏற்படும்.

## மீனம்

உங்கள் முடிவுகளை செயலாக்குவதில் நேர்மை வேண்டும். மனதில் குழப்பங்கள் கொள்ள வேண்டாம். உங்கள் செயல்களை கவனமாக முடிவு செய்து திட்டமிட்டு செயலாற்ற வேண்டும்.

மிகுந்த முயற்சியுடன் பணியாற்ற வேண்டும். வீட்டுப் பிரச்சினைகள் பணியை பாதிக்காவண்ணம் பார்த்துக் கொள்ளுங்கள்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியுடன் இருக்க வெளியிடங்களுக்கு சென்று வாருங்கள். திரைப்படம் போன்ற பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளை காணுங்கள். இதன் மூலம் இருவரும் மகிழ்ச்சியாக இருக்கலாம்.

இன்று பணப்பற்றாக்குறை காணப்படும். இதனால் நீங்கள் சிறிய அளவில் கடன் வாங்க நேரலாம்.

இன்று ஆரோக்கியம் சுமாராக இருக்கும்.

